மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மற்ற ஹவுஸ் கமிட்டிகளை அங்கு போய்தான் பார்க்க வேண்டுமென்று அல்ல. அவைகளுடைய குறிப்புகளை வேண்டுமானாலும் வரவழைத்து ஹவுஸ் கமிட்டிக்குத் தரலாம். அவர்கள் அறிந்து தக்க முடிவை எடுக்கலாம்.'

திரு. நா. வீராசாமி : இப்பொழுது நாட்டிலே எம்.எல்.ஏ.க்கள் உட்கார்ந்தால் தப்பு, எழுந்தால் தப்பு என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் விளையாட ஏற்பாடு செய்தால், எம்.எல்.ஏ.-க்கள் மெட்ராசிலே விளையாடு கிறார்கள் என்று எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே, இதை மறு பரிசீலனை செய்து, கைவிட அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 'இன்டோர் கேம்ஸ்' என்று இருப்பது மிகமிக நல்லதுதான். இப்பொழுது அறைக்கு அறை வேறு விளையாட்டுகள் விளையாடுவதாகத்தான் கேள்விப்படுகிறோம். (சிரிப்பு). அவற்றிலிருந்து மாறி, இப்படிப்பட்ட நல்ல விளையாட்டுகளில் ஈடுபடுவது நல்லதுதான்.

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவ மனைகள்.

*105 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சையில் உள்ள இராசா மிராசுதார் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம், பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். வடிவேல் : அவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே ராஜா மிராசுதார் மருத்துவ மனையிலே தினம் தினம் கூட்டம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அந்தக் கூட்டம் அதிகரிக்காமல் இருப்பதற்கு கட்டிடங்களை விஸ்தரிக்க அரசு முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அண்மையிலேதான் அங்கே பிரசவத்திற்கும் அறுவை சிகிச்சைக்குமாக 30 படுக்கை கொண்ட வார்டு ரூ. 2,95,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் குடும்ப நலத் திட்ட அடிப்படையில் அறுவை சிகிச்சைக்கு ஒரு வார்டு 20 படுக்கையோடு ரூ. 2,00,000 செலவில் கட்டி முடிக்கப் பட்டிருக்கிறது. அதேபோல் தோல் வியாதிக்கும்; இன உறவு காரணமாக ஏற்படுகிற வியாதிக்கும், 'டெட்டனஸ்' வியாதிக்கும் அதேபோல் குழந்தைகளுக்கான சிகிச்சைத் தேவைகளுக்காக 40 படுக்கைகளோடு ரூ. 1,65,000 செலவில் ஒரு வார்டு கட்டப் படுகிறது. அநேகமாக கட்டப்பட்டிருக்கும். இதற்கான சுற்றுச் சுவர் ரூ. 60,000 செலவில் கட்டி முடிக்கப்பட்டு வருகிறது. மேலும் பல பகுதிகளை விரிவாக்க ஆலோசனை இருக்கிறது. நிதி வசதிக்கேற்ப அவ்வப்போது விரிவாக்கப்படும்.

* 106 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடந்தை அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ரூ. 1,81,000 செலவில் 32 படுக்கைகள் கொண்ட ஒரு பகுதி கட்டவும், ரூ. 30,000 செலவில், காது, மூக்கு, தொண்டைப் பகுதிக்காக ஒரு சிகிச்சைப் பகுதி கட்டிடம் கட்டவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ் வேலைகள், பொதுப்பணித் துறையினரால் விரைவில் தொடங்கப்படும்.

Post Graduate course in Orthopaedics

* 107 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether Post-Graduate course in Orpthopaedics is being conducted in the Medical Colleges in this State ; and

(*b*) if so, the details thereof?